**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl.Sessions Case No. | : | 11/2023 (Mother case SC.No. 17/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-35** |
| | | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr.விக்னேஷ்வரன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 26th day of June 2025.

**(எதிரி பிரேம்குமார் ஆஜர்படுத்தப்பட்டார். அவரது வழக்கறிஞரும் ஆஜராகியிருந்தார்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் இரண்டாம் வருடம் அவசர மருத்துவ சிகிச்சை படித்து வருகிறேன். அதற்கு முன்பு கரூர் அப்பல்லோ மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றும்போது 18.09.2020 அன்று காலை 9.15 மணியளவில் கிருஷ்ணமூர்த்தி, வயது 25 என்ற நபரை தினேஷ் என்பவர் கிருஷ்ணமூர்த்தியின் உடலில் வெட்டு காயத்துடன் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். கிருஷ்ணமூர்த்தியை பரிசோதித்தபோது அவருக்கு தலையில் இரண்டு மிகப்பெரிய வெட்டு காயங்களும் மற்றும் கழுத்து பகுதியில் மிகப்பெரிய வெட்டு காயங்களும், இரண்டு தோள்பட்டையில் வெட்டு காயங்களும் காணப்பட்டது. இடது மணிக்கட்டிலும், முழுங்கையில்

மிகப்பெரிய வெட்டுகாயங்கள் காணப்பட்டது.மேலும் வலது மணிக்கட்டிலும், வலதுபக்க தொடையிலும் மிகப்பெரிய வெட்டுகாயம் காணப்பட்டது. மேற்சொன்ன காயங்களில் ஏற்பட்ட மிகுந்த ரத்தபோக்கின் காரணமாக கிருஷ்ணமூர்த்தி மயக்க நிலையில் இருந்தார். அவருக்கு பரிசோதனை பார்த்ததில் இருதயதுடிப்பு, ரத்த அழுத்தம் குறைவாக இருந்தது. ரத்தபோக்கினை சரிசெய்வதற்காக தையல் போடப்பட்டது. அவருக்கு ரத்தம் கொடுக்கப்பட்டு அதற்குண்டான சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. மயக்க நிலையில் இருந்ததால் அவருக்கு வாய்வழியா கசெயற்கை சுவாசம் கொடுக்கப்பட்டது. குளுக்கோஸ் பாட்டில் ஏற்றப்பட்டது. மேலும், அவருக்கு ரத்தப்போக்கிற்கான சிகிச்சை அளிக்கப்பட்டது. மேற்சொன்ன சிகிச்சைகள் கொடுத்தபோதும் கிருஷ்ணமூர்த்தி எந்தவொரு பலனும் இல்லாமல் 10.52 க்கு உயிர் இறந்துவிட்டார். மேற்சொன்ன கிருஷ்ணமூர்த்தியின் உடலை அரசு மருத்துவமனைக்கு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. கிருஷ்ணமூர்த்தி அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தபோது கொடுக்கப்பட்ட விபத்து பதிவேடு இதுதான். <u>அது அ.த.சா.ஆ.58 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அ.த.சா.ஆ.58 நகலை தாய்வழக்கான 17/2021 என்ற வழக்கில் இருந்த அ.த.சா.ஆ.19 உடன் ஒப்பீடு செய்து சரிபார்த்து குறியீடு செய்யப்பட்டது.)</u> சா.பொ.2 மற்றும் சா.பொ.3 போன்ற ஆயுதத்தால் மேற்சொன்ன வெட்டுகாயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. காவல் துறையினர் விசாரித்தனர். ஏற்கனவே தாய்வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன்.

<u>குறுக்கு விசாரணை</u> :-இல்லை

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.